**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், ஆனி மாதம் 26 ம் நாள்

2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 10-ம் நாள் வியாழக்கிழமை

**இடைக்கால மனு எண்.17/2025**

**in**

**அசல் வழக்கு எண். 1071/2017**

K.சக்திகுமார் @ விஜயராகவன் **...மனுதாரர் /3 ம் நபர்**

//எதிர்//

1. R.மனோகரன்
2. துளசிமணி
3. கௌரி பிரகாஷ்
4. பிரியா (முன்பு இளவர்)
5. பிருந்தா (முன்பு இளவர்)
6. ராமசாமிக்கவுண்டர் (இறந்துவிட்டார்) **...எதிர்மனுதாரர்கள்/வாதிகள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஸ்ரீநாத், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.குப்புராஜ், அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

வாதி தரப்பில் வா.சா.ஆ.26 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பெரியமாரப்பன் (எ) மாரப்பன் என்பவரின் 13.11.1951ம் தேதிய பதிவு எண்.108/1945 கொண்ட இறப்பு

சான்றிதழ் அடங்கிய இறப்பு பதிவேட்டை கோயமுத்தூர் மாநகராட்சி பிறப்பு இறப்பு பதிவுத்துறையிலிருந்து இந்நீதிமன்றத்திற்கு வரவழைத்துக் கொள்ள உத்தரவாக வேண்டி மனுதாரர்/ 3 ம் நபரால் பிரிவு 75 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

1.1). மனுதாரர்/3 ம் நபர் அ.வ.எண்.8/2021 மற்றும் அ.வ.எண்.160/2021 வழக்கில் பிரதிவாதியாவார். எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவின் அசல் வழக்கு மற்றும் அ.வ.எண்.8/2021, அ.வ.எண்.160/2021 ஆகிய மூன்று வழக்குகளையும் தாக்கல் செய்துள்ளனர். தாவா வழக்கானது தற்போது மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில் இந்த எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் காலம் சென்ற பெரியாக்கவுண்டர் மகன் பெரிய மாரப்பன் (எ) மாரப்பன் என்ற பெயரில் ஒரு இறப்புச் சான்றிதழை இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்துள்ளனர். மேற்படி இறப்பு சான்றிதழானது பெரிய மாரப்பன் (எ) மாரப்பன் கடந்த 28.09.1945 ம் தேதி கோயமுத்தூரில் உள்ள சி.எம்.சி மருத்துவமனையில் இறந்ததாகவும், மேற்படி இறப்பானது 10.10.1945 ம் தேதி பதிவு செய்யப்பட்டதாகும். பதிவு எண்.108/1945 என பதிவுக்கு ஏற்றுக்கொண்டதாகவும், மேற்படி சான்றிதழானது கோயமுத்தூர் முனிசிபாலிட்டி ஆணையாளர் மூலம் கடந்த 13.11.1951 ம் தேதி வழங்கப்பட்டதாகவும் மேற்படி சான்றிதழில் குறிப்புகள் உள்ளன.

1.2). ஆனால் 1951 ம் ஆண்டு வழங்கப்பட்ட மேற்படி சான்றிதழில் CERTIFICATE OF DEATH issued under section 12 and section 17 of the Registration of Birth and Deaths Act 1969 என்ற சட்டப்பிரிவு இடம்பெற்றிருப்பதால், 1951 ம் ஆண்டு வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழில் அதன் பின்பு 18 ஆண்டுகள் கழித்து வந்த 1969 சட்டப்பிரிவு இடம்பெற்றுள்ளது மேற்படி ஆவணத்தினுடைய உண்மை தன்மையை சந்தேகிக்கும் வகையில் இருப்பதால் மேற்படி ஆவணம்

உண்மையானதா போலியானதா என்பதை இந்நீதிமன்றத்திற்கு நிரபிக்க வேண்டியது மனுதாரர் தரப்பு வாதத்திற்கு மிகவும் முக்கியமானதாக இருந்து வருகிறது. எனவே எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.26 ஆன பெரிய மாரப்பன் (எ) மாரப்பன் என்ற பெயரில் உள்ள இறப்பு சான்றிதழ் 13.11.1951ம் தேதிய பதிவு எண்.108/1945 அடங்கிய இறப்பு பதிவேட்டை கோயமுத்தூர் மாநகராட்சி பிறப்பு இறப்பு பதிவுத் துறையிலிருந்து இந்நீதிமன்றத்திற்கு வரவழைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாய் உள்ளது. எனவே மனுதாரர் இம்மனு தாக்கல் செய்துள்ளார். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**2). எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :**

2.1). மேற்படி மனு பொய்யானது, மோசடியானது. மேற்படி மனுவானது சட்டப்படியும், பொருன்மைகளின் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டவற்றை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள விவரங்களானது தவறானது, உண்மையானது அல்ல. மேற்படி பிரமாண வாக்குமூலமானது சாட்சியை அழைக்க போதுமான காரணங்களை சொல்லவில்லை. எனவே மேற்படி மனுவானது சட்டப்படியும் பொறுன்மைகள் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. வா.சா.1 குறுக்கு விசாரணையின் போது வா.சா.ஆ.26 ஆவணத்தின் செல்லும் தன்மை குறித்து கேள்வி கேட்கப்பட்டது. வா.சா.ஆ.26 ஆவணமானது பிரிட்டிஷ் காலத்தில் வழங்கப்பட்டது, கோயம்புத்தூர் மாநகராட்சி ஏற்படுவதற்கு முன்பாக வழங்கப்பட்டது, மேற்படி காரணங்களால் சாட்சியின் முகவரியானது தவறானது, மேற்படி காரணங்களினால் மேற்படி மனுவானது காலதாமதப்படுத்த வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சாட்சியை அழைக்க குறிப்பிட்டுள்ள முகவரியில் கண்டுள்ள நபரானவர் மேற்படி ஆவணத்தின் செல்லும் தன்மையை குறித்து சாட்சியம் அளிக்க தகுதியான நபர் அல்ல.

2.2). வா.சா.ஆ.26 மற்றும் பி.சா.ஆ.14 ஆவணங்கள் 1962 சட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட ஆவணங்களாகும். மேற்படி ஆவணங்கள் அவர்களின் இறப்புக்கு பின்னிட்டு ஏற்பட்டுள்ளது. மேலும் வருவாய்த்துறையினரால் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழானது உண்மையான ஆவணம் அல்ல, அது நபர்களின் தகவலின் பெயரில் வழங்கப்படும் ஆவணமாகும். இந்திய சாட்சியச் சட்டத்தின் படி, தரப்பினருக்கிடையிலான உறவுமுறை மற்றும் அவர்களின் இறப்பை உறுதி செய்வதில் எந்தவிதமான தடையும் சட்டத்தில் இல்லை. இறப்பு சான்றிதழும், சட்ட வாரிசு சான்றிதழும் குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில், அவை தங்களின் சாட்சிய மதிப்பின் அடிப்படையில் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படலாம்.

2.3). இதற்கு முன்பாக, மனுதாரர் கூறிய உறவுமுறையை நிராகரிக்க, எதிர்மனுதாரர்கள் வா.சா.3 மற்றும் வா.சா.4 ஆகிய சாட்சிகளை விசாரித்துள்ளனர். மனுதாரர் கூறியதாவது, மறைந்த பெரியகவுண்டருக்கு இரு மனைவிகள் என்றும், தங்களது மூதாதையர் 2 வது மனைவியின் மகனாக இருந்தார் என்பதாகும். இதை மறுக்கவே எதிர்மனுதாரர்கள் மேற்கண்ட சாட்சிகளை ஆஜர்படுத்தியுள்ளனர். இருதரப்பு சாட்சியங்கள் முடிவடைந்த நிலையில் மேற்படி மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. பிரமாண வாக்குமூலத்தில் சாட்சியை அழைப்பதற்காக சொல்லியுள்ள காரணங்கள் எதிர்மனுதாரரின் வழக்கை பொய்ப்பிக்க போதுமான காரணங்கள் இல்லை. இது சட்டத்தால் அங்கீகரிக்கப்படவில்லை. உரிமையியல் நடைமுறை விதிகள், விதி 75 விதிமுறைகளை பின்பற்றாமல் மேற்படி மனு தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3.** இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

6. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் இந்த வழக்கில் தரப்பினர் அல்ல, அவர் 3ம் நபராவார். மனுதாரர் அ.வ.எண்.8/2021 மற்றும் அ.வ.எண்.160/2021 வழக்கில் பிரதிவாதியாவார். வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மூன்று வழக்குகள் தாக்கல் செய்துள்ளனர். எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மாரப்பன் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.26 ஆவணத்தில் மாரப்பன் கடந்த 28.09.1945ம் தேதி கோயம்புத்தூரில் உள்ள சி.எம்.சி மருத்துவமனையில் இறந்ததாகவும், மேற்படி இறப்பானது 10.10.1945 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டதாகவும் 13.11.1951ம் தேதி கோயம்புத்தூர் முனிசிபாலிட்டி ஆணையாளர் மூலம் சான்றிதழ் வழங்கப்பட்டதாக குறிப்பு உள்ளது. உரிமையியல் விசாரணை முறை சட்டம் விதி 75 விதிமுறைகளை பின்பற்றாமல் மேற்படி மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.1). வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் பி.சா.1 சாட்சியம் முடிக்கப்பட்ட நிலையில் மேற்படி மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு எண்.1071/2017 மற்றும் அ.வ.எண்.8/2021, அ.வ.எண்.160/2021 வழக்குகள் நிலுவையில் உள்ளன. மேலும் அசல் வழக்கு எண்.1071/2017 வழக்கானது (பழைய வழக்கு எண்.1472/2014) 2014 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வருகிறது, இருதரப்பு சாட்சியம் முடிவடைந்த நிலையில் மேற்படி மனுவானது காலதாமதத்தை ஏற்படுத்த வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்த வழக்கில் மனுதாரர் தரப்பினராக இல்லாமல் 3ம் நபராக இருந்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல. எனவே நீதியின் நலன் கருதி மேற்படி மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025ம் ஆண்டு ஜுலை திங்கள் 10ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Draft/Fair order
IA.No.17/2025 in
OS.1071/2017 in
Dated:.10.07.2025
DMC, Sulur.